## திவிநெகும நிதியம் - 2014

-----------------------------------------------------------------

திவிநெகும நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன அவை இடம்பெற்ற குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் பேணப்பட்டு வரும் 1249 கட்டிடங்களுக்கான பெறவேண்டிய வாடகை ரூபா 14,988,000 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்காக தேறிய உள்ளபடியான வருமானம் ரூபா 9,143,000 மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நியம இலக்கம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதிக்குள்ளான காசுப்பாய்ச்சல் கூற்று செயற்பாட்டு, வைப்பு மற்றும் நிதிச் செயற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். எனினும், செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலான ரூபா 125,110,192 மற்றும் வைப்பு நடவடிக்கைககளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 126,825,848 ஒன்றுக்கொன்று சீராக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,715,656 ஆக காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை**

பின்வரும் கணக்கீட்டு விடயங்களின் மிகுதிகள் காட்டப்பட்டதற்கான சாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பெற வேண்டிய தொகை மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை | 10,415,212 | விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | பெற வேண்டிய தொகை, விவசாயம் | 7,561,959 | விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் |

**2.3 பெறவேண்டிய கணக்கு**

2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட 3 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட 212,000,000 மற்றும் ஊழியர்களின் கடன் சுழலும் நிதியத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபா 15,928,127 என்பவை 2019 யூன் 30 ஆந் திகதி வரையில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3(ஆ) பந்தியின் பிரகாரம் நிதியம் சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இந்த நிதியம் தொடர்ந்து பேணப்படுவதற்கான தேவைப்பாடு சம்பந்தமாக மீளாய்வு செய்யப்படவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதிவிளைவு ரூபா 104,701,961 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவு ரூபா 137,289,460 ஆனதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 32,587,499 ஆன குறைபாடு காணப்பட்டது. வைப்புக்களுக்கான வட்டி வருமானம் உள்ளடங்கலாக மொத்த வருமானம் ரூபா 32,988,365 ஆல் குறைவடைந்தமை இக்குறைபாட்டிற்கான பிரதான தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

வருமானம் உழைக்கும் முறைமைகளை அறிமுகப்படுத்தல், சமூக ரீதியான அமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கான தேவையான நிதி வசதிகளை வழங்குதல், சுய தொழிலாளர்களுக்கான நிரந்தர அதிகாரமளித்தலும் வறுமைப்பட்டோரை ஊக்கமளிப்பதன் மூலம் அவற்றை செயற்படுத்தலும், திறைசேரி ஏற்பாடுகளுக்குப் புறம்பாக வருமானம் உழைக்கும் நிகழ்சித்திட்டங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான வங்கிகள் / வங்கிச் சமூகங்கள் என்பவற்றை கட்டியெழுப்புதவதற்கான தேவையான நிதி வசதிகளை வழங்குதல் என்பன இந்நிதியத்தின் நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிதி வசதிகள் தொடர்பான கோரிக்கைகள் விடுவிக்கப்படாமையுடன் எந்தவொரு நடவடிக்கையும் செயற்படுத்தப்படவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 4 வருட காலத்திற்கு பின்னர் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றம் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் முறையாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது.